மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 128/2024**

**பி.வா.சா. 2**

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 15 ஆம் நாள், வாதி தரப்பு (வ.சா.1) சாட்சியின் வாக்கு மூலம் 1969ம் ஆண்டு விதி 44 ன் படி திரு.மூ.ராமநாதன்,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Name | சுரேஷ்குமார் | Caste | |
| Father / Husband's Name | பொன்னையா | Calling | |
| Village | | Religion | |

தேதி 15.09.2025

<u>முதல் விசாரணை</u>

நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பெயரில் இன்று சாட்சியம் அளிக்க ஆவணங்களுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். நான் தற்பொழுது வ.புதுப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். வ.புதுப்பட்டி கிராமத்தில் உள்ள நத்தம் புல எண் 468/20 வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்பதற்காக எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை பேரில் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**ஆவணங்கள்**

1. நத்தம் புல எண் 468/20 க்கான நத்தம் அடங்கல் Ex. X1
2. நத்தம் புல எண் 468/20 க்கான இணைய அடங்கல் Ex. X2
3. நத்தம் புல எண் 468/20 க்கான வரைபடம் Ex. X3

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நத்தம் புல எண் 468 அடங்கியுள்ள நிலமானது முழுவதுமாக நத்தம் புறம்போக்கு வகையை சார்ந்ததா என்றால் இல்லை. சில பொது மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. சில இடம் காலியிடமாக உள்ளது. நத்தம் புல எண் 468/20 க்கான வருவாய்த்துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் நத்தம் அரசு புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. நத்தம் புல எண் 468/20 ல் அடங்கிய சொத்தில் யாரேனும் குடியிருந்து வருகிறார்களா என்றால் இல்லை காலி மனையாக தான் உள்ளது. நான்கு மால் சொல்ல முடியுமா என்றால் வடக்கே அரசு புறம்போக்கு நிலமும், கிழக்கு புஞ்சை நிலமும், தெற்கே தெருவும், மேற்கே ஆபிரகாம் மற்றும் முத்தம்மாள், பாப்பா வகையாறாக்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அமைந்துள்ளது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பானையில் சொத்திற்கான விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அழைப்பானையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்குரிய நான்கு மால் எல்லைகளை வருவாய்த்துறை ஆவணங்களோடு நான் ஒப்பிட்டுப் பார்த்தேனா என்றால் அழைப்பானையில் நான்கு மால் எல்லை விபரங்கள் குறிப்பிடவில்லை. சொத்தை நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் பார்வையிட்டேன். மேற்படி சொத்தில் வாதி குடியிருந்து வருவதாக சொல்லி உள்ளார் என்றால் இல்லை காலி மனையாக தான் உள்ளது. சொத்தை பார்வையிட்டு புகைப்படம் எடுத்துக் கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் புகைப்படத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அடங்கல் பதிவேட்டில் நத்தம் புல எண் 468/20 க்கான உரிமையாளர்கள் பெயர் முத்து மகன் பொண்ணு லோ முத்து மக்கள் அந்தோணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பட்டா எண் குறிப்பிடவில்லை. பட்டா எண் குறிப்பிடப்படவில்லை என்பதால் அது அரசு நத்தம் புறம்போக்கு நிலவகை சார்ந்தது ஆகும். நத்தம் நிலவரி திட்டத்தின் படி

புறம்போக்கு நிலங்களில் பொது மக்களுக்கு பட்டா ஒதுக்கி வழங்குவது சாத்தியம் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு